10 SEP 2008

சுருக்கம்

சிலைகள் – கோயம்புத்தூர் மாவட்டம் – திருப்பூர் மாநகராட்சி குமரன் சாலை, ஊத்துக்குளி சாலை சந்திப்பில் தொடர்வண்டி நிலையம் முன்புறம் உள்ள தீவுத்திடலில் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் முழு உருவ வெண்கலச் சிலைகளை அமைத்தல் – அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (நிலை) எண். 171 நாள்: 09.09.2008

ஆவணி 24,
திருவள்ளுவர் ஆண்டு

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.221, நநி(ம)குவ துறை, நாள் 20.11.1998.
2. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் எண். ந.க. 14334/2007/இ3 நாள் 18.7.2008.
3. திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் கடிதம் எப்1/1526/2007 நாள் 19.2.2007 மற்றும் 14.8.2008.
4. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 39123/2008 மாநஅ–3 நாள் 5.9.2008.

****

ஆணை:

திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட குமரன் சாலை, ஊத்துக்குளி சாலை சந்திப்பில் திருப்பூர் தொடர்வண்டி நிலையம் முன்புறம் உள்ள தீவுத்திடலில் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் முழு உருவ வெண்கலச் சிலைகளை ஒரே பீடத்தில் அமைக்க அனுமதி வழங்கலாம் எனவும், இதற்கு திருப்பூர் மாநகராட்சி மாமன்றம் தனது தீர்மானம் எண்.1516 நாள் 8.2.2007ல் அனுமதி அளித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2. திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் டவுன் டச. எண்.219 மற்றும் 220 காலைகள் ஊடே செல்லும் சாலையில் திருப்பூர் குமரன் சாலை மற்றும் ஊத்துக்குளி சாலை சந்திப்பில் ரயில் நிலையம் முன்பாக அமைந்துள்ள தீவுத்திடல் மத்தியில் உள்ள இடத்தில் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சிலைகள் 4"X4" அளவில் அமைப்பதால் சாலை போக்குவரத்து பாதுகாப்பிற்கு எந்தவித இடையூறும் இல்லை என கோவை மாவட்ட

-

காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார் என்றும், மேற்படி குழுவிற்கு சிலைகள் அமைத்து பராமரித்துக் கொள்ள அனுமதி வழங்கலாம் என்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பரிந்துரைத்துள்ளார். மேற்படி சிலைகள் நிறுவ அனுமதி அளிக்கலாம் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் நான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் பரிந்துரை செய்துள்ளார்.

3. திருப்பூர் மாநகராட்சி மாமன்றத் தீர்மானம், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரைகளையும் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திருப்பூர் குமரன் சாலை மற்றும் ஊத்துக்குளி சாலை சந்திப்பில் ரயில் நிலையம் முன்பாக அமைந்துள்ள தீவத்திடல் மத்தியில் உள்ள இடத்தில் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் முழுஉருவ வெண்கலச்சிலைகளை 4"X4" என்ற அளவில் ஒரே பீடத்தில் நிறுவிடவும் மற்றும் பராமரித்து, பாதுகாக்கவும், திரு.க.செல்வராஜ் (மேயர் திருப்பூர் மாநகராட்சி) தலைமையிலான சிலை அமைப்புக் குழுவிற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
தலைவர், சிலை அமைப்புக் குழு, திருப்பூர்.
மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர்.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
ஆணையர், திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர்.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச் செயலர், சென்னை – 9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
நகல்:
பொது (ச(ம)ஒ) துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ௩.2) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்